தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண்.21942/ வி2/ இ2/ 2012 நாள். 29.03.2012

=====

002299

பொருள்: பள்ளிக் கல்வி – அகில இந்திய அளவில் நடைபெறும் சிசிஆர்டி, என்சி.ஆர்டி மற்றும் ஆர் ஐ இ, ஆர்.இ எஸ் ஐ ( CCRT, NCERT, RIE, + RIESI) பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர் பட்டியல் அனுப்புதல் – சார்பாக.

=====

2012–2013 ஆம் கல்வியாண்டில் நடைபெறவிருக்கும், சிசிஆர்டி, என்சி. ஆர்டி, ஆர் ஐ இ எஸ். ஐ, மற்றும் ஆர் ஐ இ ( CCRT, NCERT, RIE, + RIESI) பயிற்சியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களின் பெயர் பட்டியலை, அந்த அந்த கல்வி மாவட்டம் வாரியாக அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் தகுதியுடைய அனைத்து இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை பணிநிலைப் பிரிவு ( Cadre wise) வாரியாக தேர்வு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்தி செய்து 15 தினங்களுக்குள் இணை இயக்குநர் ( தொழிற் கல்வி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என முதன்மைக் கல்வி அலுவலர்க்கு அறிவுறுத்தலாகிறது.

மேற்காண் ஆசிரியர்களை தேர்வு செய்யும் முன் கீழ் கண்ட விவரங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ள விருக்கும் ஆசிரியர்கள் இதுவரை மேற்காண் பயிற்சிகளில் கலந்து கொள்ளாதவராகவும் 48 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் இதர மாநிலங்களில் பயிற்சி நடைட பெறுவதால் ஆங்கில அறிவு பெற்றவராக இருத்தல் அவசியம் (Knowledge of English is essential ), Special Teachers – ie . Craft, Drawing, Music and Art தனியாக பட்டியலிட்டு அனுப்பப்பட வேண்டும்.
2. தேர்வு செய்யப்படும் அனைத்து ஆசிரியர்களிடமிருந்து பயிறிசியில் கலந்து கொள்ளும் கடிதத்தினை பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் வைத்துக் கொள்ளவேண்டும்.
3. பயிற்சிக்கு தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள் கண்டிப்பாக பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும் பயிற்சியின் முக்கியத்துவத்தை பயிற்சியில் கலந்து கொள்ளவிருக்கும் ஆசிரியர்களுக்கு தெரிவித்தல் அவசியம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ( un avoidable circumstances) பயிற்சிக்கு செல்ல இயலாதவர்கள் உரிய அத்தாட்சியுடன் சமர்பிக்கும் பட்சத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் உரிய மாற்று ஏற்பாடு செய்த பின்னர் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டவருக்கு தவிர்பாணை வழங்கலாம், எக்காரணம் கொண்டும் பள்ளிக் கல்வி இயக்ககத்தை நேரிடையாக அனுகுதல் கூடாது.